ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 298)

Jul (1) / 2019

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் ....……………......3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………….......5

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் …………………………………………..……..10

4. ஆசார்ய ஹ்ருதயம்……………………………………………………………..15

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..……....…………………………………..20

6. சது: ச்லோகீ (பெரியவாச்சான்பிள்ளை, நிகமாந்த மஹாதேசிகன் வ்யாக்யானங்கள்)
……………………………………………………………………………....28

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 118)

16. ஈ மாயா பரமா சக்திர் ஜகத்யோநிர் ரஞ்ஜநா
அப்ரமேயஸ்ய ஸா ஹி ஸ்ரீர்க்ருஹிணீ க்ருஹமேதிநி

பொருள் – "ஈ" என்னும் அக்ஷர மாயை ஆகும். இதுவே இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டிக்கு ஆதாரமாக உள்ள உயர்ந்த சக்தியாகும். அவளே மஹாவிஷ்ணுவின் இல்லத்தரசியாகிய "ஸ்ரீ" ஆவாள்.

17. அஸ்யா: பூர்வமிகாரம் து யோஜயேத் ஸூக்ஷ்ம சக்ஷுஷா
இத்தம் யதிஷ்டம் யத் த்ரவ்யம் யத்தத் தத்ர ப்ரதிஷ்டிதம்

பொருள் – ஸூக்ஷ்மமான பார்வையுடன் கூடியவனாக உபாஸகன் இத்தகைய "ஈ" என்னும் அக்ஷரத்திற்கு முன்பாக "இ" என்னும் அக்ஷரத்தைச் சிந்திப்பானாக. இந்த அக்ஷரமானது விருப்பம் அனைத்தையும் அளிக்கின்ற "இஷ்டம்" எனப்படுகிறது.

18. ஆநந்தமஸ்ய பூர்வம் து சிந்தயேத் ஸூக்ஷ்ம சக்ஷுஷா
அப்ரமேயம் தத: பூர்வம் யோஜயேத் ஸூக்ஷ்ம சக்ஷுஷா

19. சக்திரேஷா ஜகத்யோநிஸ் த்ரைலோக்யைச்வர்ய தோஜ்ஜ்வலா
அப்ரமேயாத் அநாதி அநந்தாத் வ்யாபகாத் பரமாத்மந:

20. கோபநீ ஸர்வபூதாநாம் சக்திராநந்தநிர்பரா
இச்சா ஜ்ஞாந க்ரியா ரூப ஈகாரோத்தை: ஸமந்விதா

பொருள் – இதனைத் தொடர்ந்து ஸூக்ஷ்மமான பார்வையுடன் கூடியவனாக உபாஸகன் இத்தகைய இ” என்னும் அக்ஷரத்திற்கு முன்பாக “ஆ” என்னும் அக்ஷரத்தைச் சிந்திப்பானாக; இதன் மூலம் “ஆனந்தம்” என்பதை நோக்கி நகர்கிறான். தொடர்ந்து அதே சிந்தனையுடன் “அ” என்னும் அக்ஷரத்தைச் சிந்திப்பானாக; இதன் மூலம் “அப்ரமேயம்” என்பதை நோக்கி நகர்கிறான். இவ்விதமாக வெளிப்படும் “ஐ” என்பது (அ + ஆ + இ + ஈ), இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டிக்கு ஆதாரமாகவும், மூன்று லோகங்களுக்கும் தேவையான ஐச்வர்யத்தை அளிப்பதாகவும், தேஜஸ்ஸுடன் கூடியதாகவும், தொடக்கம் முடிவு அற்றதான அப்ரமேயமாக உள்ள பரமாத்மாவை அனைத்து உயிர்களும் நேரடியாக அறிய இயலாமல் அந்த உயிர்களை மூடுவதாகவும், ஆனந்தம் நிறைந்த சக்தியாகவும், “ஈ” என்னும் அக்ஷரத்திற்கு ஏற்றதான “இச்சை, ஞானம், செயல்” ஆகியவற்றுடன் கூடியதாகவும் உள்ளது.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்

ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

… தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 298)

1-4-10 கல்பந உபதேசாத் ச மத்வாதிவத் அவிரோத:

பொருள் - ஸ்ருஷ்டியைக் கூறுவதால், மது என்பது போன்று, விரோதம் இல்லை.

ஸித்தாந்தம் – ஸூத்ரத்தில் உள்ள "ச" என்ற சொல்லானது இங்கு ஏற்பட்ட சந்தேகத்தை நீக்குகிறது. இங்கு கூறப்பட்டது போன்று, ப்ரக்ருதியானது பிறப்பற்றது என்பதற்கும், அது ஜ்யோதியாகிய பரமாத்மாவிடமிருந்து வெளிப்பட்டது (அல்லது ஜ்யோதியைக் காரணமாகக் கொண்டது) என்பதற்கும் எந்த முரண்பாடும் இல்லை. ஏன்? "கல்பந உபதேசாத் – ஸ்ருஷ்டி குறித்து உபதேசிப்பதால்". கல்பநம் என்றால் உண்டாக்குதல் அல்லது ஸ்ருஷ்டி என்று பொருள்; அதாவது, "ஜகத் ஸ்ருஷ்டி குறித்த உபதேசம்" என்று பொருள். மஹா. நா. (5-7) - ஸூர்யா சந்த்ரமஸௌ ததா யதா பூர்வமகல்பயந் - சூரியனையும் சந்த்ரனையும், முன்பு இருந்தது போன்றே ஸ்ருஷ்டித்தான் - என்ற வரியில் உள்ள "கல்பநம்" என்பது ஸ்ருஷ்டியைக் குறிக்கிறது. இங்கு, ச்வே. (4-9) – அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விச்வம் ஏதத் – இதிலிருந்து, மாயையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள பரமாத்மா, இந்த விச்வத்தை ஸ்ருஷ்டிக்கிறான் - என்று ஜகத் ஸ்ருஷ்டி குறித்து உபதேசிக்கப்பட்டது; அதாவது, ஸூக்ஷ்மமான காரணநிலையில் தன்னை விட்டுப் பிரியாமல் உள்ள இந்த ப்ரக்ருதியிலிருந்து, மாயையைத் தன்வசம் வைத்துள்ள ஸர்வேச்வரன், இந்த ஜகத் முழுவதையும் ஸ்ருஷ்டித்தான் என்று பொருள். இப்படியாக உள்ள ஸ்ருஷ்டி குறித்த உபதேசம் மூலமாக, ப்ரக்ருதியானது

கார்யம் மற்றும் காரணம் ஆகிய இரண்டு நிலைகளில் உள்ளதாக உணர்த்தப்படுகிறது.

இந்த ப்ரக்ருதியானது, ப்ரளய காலத்தில் (காரணநிலையில்) ப்ரஹ்மத்துள் புகுந்து, பெயர் மற்றும் உருவம் என்று பிரிக்கப்படாத நிலையில், அவ்யக்தம் என்ற பெயர் கொண்டதாக, ஸூக்ஷ்ம ரூபத்தில் உள்ளது. ஸ்ருஷ்டி காலம் ஏற்பட்டவுடன், ஸத்வம் முதலான குணங்கள் ப்ரக்ருதிக்கு ஏற்பட்டு, தன்னைப் பெயர் மற்றும் உருவங்கள் பல உள்ளதாகப் பிரித்துக் கொண்டு, வ்யக்தம் என்ற சப்தத்தால் கூறப்படுவதாக, "தேஜஸ், நீர், பூமி" என்று முறையே "சிகப்பு, வெளுப்பு, கருப்பு" என்பதாகத் தன்னை மாற்றிக் கொள்கிறது. ஆகவே (அந்த ப்ரக்ருதியானது) காரணநிலையில் உள்ளபோது அஜா (பிறப்பற்றது) என்றும், கார்யநிலையில் உள்ளபோது ஜ்யோதியைத் தனது காரணமாகக் கொண்டது என்றும் கூறுவதில், எந்த முரண்பாடும் இல்லை.

"மத்வாதிவத்" - ஆதித்யன் காரணநிலையில் உள்ளபோது, ஈச்வரனுடன் ஒன்றாகவே உள்ளான். ஆனால் அதே ஆதித்யன் கார்யநிலையில் உள்ளபோது ருக், யஜுர், ஸாமம் மற்றும் அதர்வண வேதங்களில் கூறப்பட்ட கர்மங்கள் மூலமாக உண்டாக்கப்படும் தேனின் இருப்பிடமாகவும், தன்னை உபாஸிக்கின்ற வஸுக்கள் மற்றும் தேவர்களால் அனுபவிக்கவல்ல தேனாகவும் ஆகிறான். அந்த நிலையிலும் கூட, அவன் உதயமாவது மற்றும் அஸ்தமிப்பது குறித்து எந்தவிதமான முரண்பாடும் ஏற்படவில்லை. இதனை மதுவித்யையில், சாந். (3-1-1) - அஸௌ வா ஆதித்யோ தேவமது - ஆதித்யன் தேவர்களுக்குத் தேனாக உள்ளான் - என்று தொடங்கி, சாந். (3-11-1) - அத தத் ஊர்த்வ உதேத்ய ந ஏவ உதேதா ந அஸ்தமேதா ஏகல ஏவ மத்யே ஸ்தாதா – (கார்யநிலையில் வந்த பின்னர்) மேலே எழும்பிய அவன், (காரணநிலையில்) உதிப்பதும் அஸ்தமிப்பதும் இல்லை; நடுவில் மாறாமல் உள்ளான் - என்று கூறப்பட்டது; "ஏகல" என்றால், ஒரே போன்ற இயல்புடன் உள்ளான் என்று பொருள் (அதாவது மாறாமல் உள்ளான்). ஆகவே, இந்த மந்த்ரத்தால், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டுள்ள ப்ரக்ருதியே (அஜா) கூறப்பட்டது அல்லாமல், கபிலதந்திரத்தில் கூறப்பட்ட ப்ரக்ருதி அல்ல என்பது தெளிவாகிறது.

ஒரு சிலர் (அத்வைதிகள்) இந்த மந்த்ரத்தில் “தேஜஸ், நீர், பூமி” ஆகியவற்றால் உண்டாகிய ஒரு அஜா என்பது கூறப்படுவதாக உரைக்கிறார்கள். இவர்களிடம் சில கேள்விகள் கேட்கவேண்டியுள்ளது – பூதங்களாகிய தேஜஸ், நீர் மற்றும் பூமி ஆகியவை, ஒரே தத்வமாக உள்ள அஜா என்பதைக் குறிக்கின்றனவா? அல்லது, கார்யநிலையில் உள்ள ப்ரஹ்மமே “தேஜஸ், நீர், பூமி” என்றுள்ளதால், அஜா என்றாகிறதா? அல்லது தேஜஸ், நீர் பூமி ஆகியவற்றுக்குக் காரணமாக உள்ள வேறு ஏதோ ஒன்று (மூலப்ரக்ருதி) அஜா என்பதாக உள்ளதா?

இதில் முதல் கருத்தை எற்றால், “தேஜஸ், நீர், பூமி” ஆகியவை ஒன்றுக்கு மேற்பட்டவை என்பதால், இது ச்வே. (4-5) - அஜம் ஏகாம் – ஒரே ஒரு அஜம் - என்பதுடன் முரண்படுகிறது. இதனை மறுக்கும்விதமாக நீங்கள் (அத்வைதி), “தேஜஸ், நீர், பூமி ஆகியவை ஒன்று (எண்ணிக்கை) அல்ல என்றாலும், த்ரிவ்ருத்கரணத்தால் ஒரே வஸ்து என்றாகி விடுகிறதே”, என்று கூறலாம். ஆனால் இது சரியல்ல; த்ரிவ்ருத்கரணத்தை அடைந்தாலும், அவற்றின் பலவாக உள்ள தன்மை மாறுவதில்லை; எப்படி? சாந். (6-3-2) - இமாஸ்திஸ்ரோ தேவதா: - இந்த மூன்று தேவதைகள் – என்றும், சாந். (6-3-3) - தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதம் ஏகைகாம் கரவாணி - நான் அவை ஒவ்வொன்றையும், மூன்று கூறாக்குவேன் - என்றும் உள்ள வாக்கியங்களால், ஒவ்வொன்றுக்கும் த்ரிவ்ருத்கரணம் உபதேசிக்கப்படுகிறது.

இரண்டாவது கருத்தில் இரண்டு கேள்விகள் அடங்கியுள்ளன – ப்ரஹ்மமே “தேஜஸ், நீர், பூமி” என்ற மாறுதல்களை அடைந்து, அஜா என்ற ஒரே வஸ்துவாகிறதா? அல்லது ப்ரஹ்மமானது தனது ஸ்வரூபத்தில் மாறுபாடு அடையாமல், ஒரு அஜா எனப்படுகிறதா? இதில் முதல் கருத்து நேரடியாகவே தள்ளப்படுகிறது; காரணம், பலவாக உள்ள தன்மை மறையாமல் உள்ளதால் ஆகும். இரண்டாவது கருத்தானது, சாந். (4-5) - லோஹித சுக்ல க்ருஷ்ணாம் – சிகப்பு, வெளுப்பு, கறுப்பு - என்பதுடன் முரண்படுகிறது; மேலும், ப்ரஹ்மம் தனது ஸ்வரூபத்துடன் உள்ளபோது, தேஜஸ் முதலானவற்றை அதன் லக்ஷணங்களாகக்

கூறமுடியாது (அதாவது ஒரு பொருள் நேரடியாகவே உள்ளபோது, அதனை மறைமுகமாக வர்ணிக்க வேண்டிய அவசியம் இல்லை).

மூன்றாவது கருத்தின்படி, “அஜா” என்னும் சொல்லால், “தேஜஸ், நீர், பூமி” ஆகிய பூதங்கள் முதலில் உணர்த்தப்பட்டு, அவை மூலம் அஜா என்பது காரணநிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது - என்பதை ஏற்கவேண்டும். இதற்கு மாறாக அஜா என்பது, “தேஜஸ், நீர், பூமி” ஆகியவற்றின் காரணநிலையாக (ப்ரக்ருதி) உள்ளதை ச்ருதி கூறுவதால், அப்படியே எடுத்துக்கொள்ளலாம் அல்லவோ?

அடுத்து ஒரு சிலர் (இதுவும் அத்வைதிகளே ஆவர்), “அஜா என்ற சொல் மூலம், ப்ரக்ருதியானது ஒரு பெண் ஆட்டின் உருவமாகக் கூறப்படுகிறது”, என்கிறார்கள். இத்தகைய கற்பனையால் எந்தப் பயனும் இல்லை என்பதால், இது பொருத்தமற்றதாகும். உதாரணமாக, கட. (3-3) - ஆத்மாநம் ரதிநம் வித்தி – ஆத்மாவைத் தேரில் அமர்ந்துள்ளவனாக அறிவாயாக - என்ற வாக்கியத்தில், சரீரமானது ப்ரஹ்மத்தை அடைவதற்கான உபாயமாக உள்ளது என்பதை உணர்த்துவதற்காகவே, சரீரமானது தேராக உருவகம் செய்யப்பட்டது. இதே போன்று, ஆதித்யனை வஸுக்கள் முதலான தேவர்கள் அனுபவிக்கிறார்கள் என்பதை உணர்த்தும்விதமாக, ஆதித்யன் தேனாக உருவகம் செய்யப்பட்டான்.

ஆனால், அது போன்று இங்கு ப்ரக்ருதியை ஒரு பெண் ஆடாகக் கற்பனை செய்வதால், நிகழ்வது என்ன உள்ளது? இதனால் பயன் ஏதும் இல்லை என்பது மட்டும் அல்லாமல், முரண்பாடும் ஏற்படுகிறது. (எப்படி என்று விளக்கப்படுகிறது) ப்ரக்ருதியானது - இந்த ஜகத்தின் காரணபூதமாக உள்ளது; தன்னிடம் எல்லையற்ற காலமாக ஸம்பந்தம் கொண்டுள்ள அனைத்து சேதந வஸ்துக்களுடைய இன்பதுன்பங்களுக்கும், மோக்ஷத்திற்கும் ஸாதநமாக உள்ளது; அசேதநமாக உள்ளது - ஆகும். இப்படிப்பட்ட தன்மைகள் கொண்ட ப்ரக்ருதியை, ஒரு சில ப்ரஜைகளை மட்டுமே உண்டாக்கக்கூடிய சக்தி உள்ளதும், தற்செயலாக ஒரு சேதநனுடன் ஸம்பந்தம் கொண்டு அவனுக்கு ஒரு குறிப்பிட்ட குறைவான பலனை (பால் முதலியவை) அளிக்கவல்லதும், தான் யாரையும் கைவிடவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் மற்றவர்களால் கைவிடும்படி உள்ளதாகவும்,

சேதநமாகவும் உள்ள ஒரு பெண் ஆட்டைப் போன்றது என்று கற்பனை செய்தல் முரணானதே ஆகும்.

மேலும், ச்வே. (4-5) - அஜாம் ஏகாம் … அஜோ ஹி ஏக: … அஜ: அந்ய – பிறப்பற்ற ஒன்று … ஒரு பிறப்பற்றது … மற்றொரு பிறப்பற்றது - என்பதில் உள்ள “அஜா” என்ற சொல்லிற்குப் பலவிதமான பொருள்களைக் கற்பிப்பது சரியல்ல. இதற்கு நீங்கள் (அத்வைதி), “அனைத்து இடங்களிலும் ‘பெண் ஆடு’ என்ற பொருளையே கொள்ளலாம்”, என்று கூறலாம். ஆனால் இது அடியுடன் முரண்படும் கருத்தாகும்; எப்படி? ச்வே. (4-5) – ஜஹாத்யேநாம் முக்தபோகாம் அஜ: அந்ய: – மற்றொரு பிறப்பற்றவன் (அதாவது ஜீவாத்மா), இவளை (ப்ரக்ருதியை) அனுபவித்த பின்னர், (மோக்ஷம் அடையும்போது) துறக்கிறான் - என்று கூறுவதால், முக்தி அடைந்து செல்லும் அறிவுள்ள ஆத்மா ஒருவன், மீண்டும் வந்து ப்ரக்ருதியுடன் (இந்தப் பெண் ஆட்டுடன்) ஸம்பந்தம் கொள்கிறான் என்று கூறுவது முரண்பாடு ஆகும்.

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

… தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 298)

மூலம் – (6) இப்படி நிரபராதமான உத்தரக்ருத்யத்தை அபேக்ஷியாதார்க்கும் மேல் புத்தி பூர்வ அபராதம் வந்தாலும் "ந த்யஜேயம் கதஞ்சந" என்று இருக்கக்கடவ, சரண்யன் இவனுக்கு அநுதாபத்தை உண்டாக்கிப் புந:ப்ரபத்தியாகிற ப்ராயச்சித்த விசேஷத்திலே மூட்டியும், அதுவும் கைதப்பும்படியான கடின ப்ரக்ருதிகளுக்கு சிக்ஷாரூபங்களான உபக்லேச மாத்ரங்களைக் காட்டி மேல் அபராதம் பண்ணாதபடி விலக்கியும், பலங்கோரின காலத்துக்கு முன்பே கண்ணழிக்கையாலே ப்ரபந்நனுக்கு மின்னொளி போலே தோற்றி நிலைநில்லாதே போகிற புத்தி பூர்வ அபராத லேசங்களாலே நரகாதி மஹாக்லேசங்கள் வரில் செய்வதென் என்று சங்கித்து சோகிக்க வேண்டா.

விளக்கம் – ஒருவன் தனது ப்ரபத்தி காலத்தில், "பின்னால் வரும் வாழ்நாள் முழுவதும் எந்தவிதமான அபராதங்களையும் செய்யாமல் இருப்பேனாக", என்று ப்ரார்த்தனை செய்யாமல் இருந்தான் என்றாலும், அவனுக்கு ப்ரபத்தியின் பின்னர் அபராதங்கள் வந்து சேர்ந்தாலும், ஸர்வேச்வரன் இராமாயணம் யுத்தகாண்டம் (18-4) - ந த்யஜேயம் கதஞ்சந – நான் ஒருபோதும் கைவிடேன் – என்று கூறினாலும், அந்த மனிதனுடைய மனதில் "நாம் தவறு செய்துவிட்டோம்" என்னும் எண்ணத்தை உண்டாக்கி, அவனை மீண்டும் ப்ரபத்தி என்னும் ப்ராயச்சித்தம் செய்யும்படியாகச் செய்கிறான். அதனையும் செய்யாமல் இருக்கின்ற சில கடினமான மனிதர்களுக்கு ஒரு சில சிறிய தண்டனைகளை அளித்து, அவர்கள் மீண்டும் அபராதங்களைச் செய்யாமல் இருக்கும்படியாக மாற்றுகிறான். அவன் பலன் பெறுவதற்கும்

முன்பாகவே அவனிடம் உள்ள அனைத்து தவறுகளையும் நீக்குகிறான். ஆகவே அவனால் செய்யப்பட்ட அனைத்துவிதமான அபராதங்களும் வானில் தோன்றி மறையும் மின்னல் போன்றே உள்ளதால், “முன்பு செய்த அபராதங்களுடைய விளைவால் நரகம் ஏற்பட்டால் என்ன செய்வது?”, என்னும் சந்தேகத்தால் துக்கம் அடையவேண்டாம்.

மூலம் – (7) ஆர்த்தி ப்ரபந்நனுக்கு அப்போதே பல ஸித்தியுண்டாம்படி இருக்கையாலே “தேஹே சேத் பரீதிமான் மூடோ பவிதா நரகே அபி ஸ:” என்னும்படி நரக துல்யமான இச்சரீரம் அநுவர்த்திக்கிறதோ என்று சோகிக்கவேண்டா.

விளக்கம் – ஒரு க்ஷணமும் கூட காலதாமதத்தைப் பொறுக்க இயலாமல் உள்ள ஆர்த்தி ப்ரபந்நன் ஒருவனுக்கு, நான் அப்போதே மோக்ஷம் அளிக்கிறேன். ஆகவே ஸ்ரீவிஷ்ணு புராணம் (1-17-63) - தேஹே சேத் பரீதிமான் மூடோ பவிதா நரகே அபி ஸ: - சரீரத்தில் அன்பு வைக்கும் மூடன் ஒருவன் நரகத்தில் ஈடுபடுவான் – என்று கூறுவதற்கு ஏற்ப நரகத்திற்குச் சமமான இந்தச் சரீரம் நீடித்தபடி இருக்குமோ என்னும் துக்கம் வேண்டாம்.

மூலம் – (8) கர்மயோகம் முதலான நிவ்ருத்தி தர்மங்களெல்லாம் “ந இஹ அபி க்ரம நாச: அஸ்தி” இத்யாதிகளிற்படியே இட்டபடை கற்படையாகையாலும், இச் சரணாகதனைப் பற்ற விசேஷித்து “ந த்யஜேயம் கதஞ்சந” என்கையாலும், த்ருப்த ப்ரபந்நனுக்கும் கோரின காலத்தளவு விளம்பித்தாலும் பலஸித்தியில் ஸம்சயமில்லாமையாலே, “யஜ்ஞ: அந்ருதேந க்ஷரதி தப: க்ஷரதி விஸ்மயாத் | ஆயுர் விப்ரபரீவாதாத் தாநம் ச பரிகீர்த்திநாத்” இத்யாதிகளிற்படியே, ஸுக்ருத நாசகங்களாயிருப்பன சில துஷ்க்ருதங்களாலே இப் ப்ரபத்தி ரூபமான ஸுக்ருதம் நசித்துப் பலம் கிடையாதொழியில் செய்வதென் என்று சோகிக்க வேண்டா.

விளக்கம் – மறுமைப் பயனை அளிக்கவல்லதான கர்மயோகம் முதலான கர்மங்கள் அனைத்தும் கீதை (2-40) - ந இஹ அபி க்ரம நாச: அஸ்தி – கர்மயோகத்தில் தொடங்கப்பட்ட எதுவும் அழிவதில்லை – என்று கூறுவதற்கு ஏற்ப அஸ்திவாரம் இட்டது கல்லைக் கொண்டு என்பதால் பலனை நிச்சயமாக அளித்தே தீரும் என்பதாலும், சரணம் புகுந்த இவனைக் குறித்து இராமாயணம் யுத்தகாண்டம் (18-4) - ந த்யஜேயம் கதஞ்சந – நான் ஒருபோதும் கைவிடேன் – என்று உறுதியுடன் உள்ளதாலும், ப்ரபந்நன் ஒருவன் விணப்பித்த காலம் முடிய மோக்ஷம் என்பது தாமதமானால் கூட பலன் கிட்டுமோ என்னும் ஐயம் தேவையில்லை. ஆகவே மநுஸ்ம்ருதி (4-27) - யஜ்ஞ: அந்ருதேந க்ஷரதி தப: க்ஷரதி விஸ்மயாத் | ஆயுர் விப்ரபரீவாதாத் தாநம் ச பரிகீர்த்திநாத் – யாகமானது பொய் உரைப்பதாலும், தவமானது கர்வம் அடைவதாலும், ஆயுளானது அந்தணர்களைத் தூஷிப்பதாலும், தானமானது தானே வெளிப்படுத்திக்கொள்வதாலும் அழிகின்றன – என்று கூறுவதற்கு ஏற்ப நற்செயல்களாக உள்ள சிலவற்றை அழிப்பதாக தீமையான செயல்கள் உள்ளது போன்று, இந்தப் ப்ரபத்தி ரூபமான நற்செயலானது அழிந்து, பலன் கிட்டாமல் போனால் என்ன செய்வது என்று சோகம் கொள்ளவேண்டாம்.

மூலம் – (9) இச் சரீராந்தரம் மோக்ஷம் பெறவேண்டுமென்று காலங்குறிக்கையாலே, ஜந்மாந்தராதி ஹேதுக்களான ப்ராரப்த கர்ம விசேஷங்களாலே நமக்கு ஜந்மாந்தரங்கள் வரில் செய்வதென் என்று சோகிக்க வேண்டா.

விளக்கம் - இந்தச் சரீரம் முடிந்தவுடன் மோக்ஷம் அடையவேண்டும் என்று சேதநன் விரும்புவதால், அடுத்த ஜன்மத்தை உண்டாக்கக் காரணமாக உள்ளதான "பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்கள்" என்பதன் விளைவாக, பல பிறவிகள் உண்டானால் என்ன செய்வது என்று சோகம் அடையவேண்டாம்.

மூலம் – (10) அநந்ய ப்ரயோஜநனாய் ப்ரபந்நனான இவனுக்குப் ப்ரதிபந்தகங்களான ஸர்வபாபங்களும் கழிகையாலே கேவல ஆத்ம அநுபவாதிகளான அந்தரயங்களாலே பரம பலத்துக்கு விளம்பம் வருகிறதோவென்று சோகிக்க வேண்டா.

விளக்கம் – மற்ற எந்த பலன்களையும் நாடாமல் ப்ரபத்தியைக் கைக்கொண்ட ஒருவனுக்கு, மோக்ஷம் பெறுவதில் இடையூறாக இருந்த அனைத்து பாபங்களும் (கர்மங்கள்) நீங்குவதால், ஆத்ம அனுபவம் என்பது போன்றவற்றால் மிகவும் உயர்ந்த பலனாகிய மோக்ஷத்தை அடைவதில் காலதாமதம் உண்டானால் என்ன செய்வது என்று சோகம் அடையவேண்டாம்.

மூலம் – இப்படி ஸர்வப்ரகார சோக ஹேதுக்களும் கழியும்படி எனக்கு அநுக்ரஹ விஷய பூதனான நீ இனி சோகிக்கையாவது முன்பு நிக்ரஹ விஷய பூதனாய் நின்ற தசையில் சோகியாதாப் போலே அநிபுண க்ருத்யமாய் இவ் உபாய விசேஷ வைலக்ஷண்யத்துக்கும் ரக்ஷணபரமேறிட்டுக் கொள்ளுகிற ஸித்தோபாய பூதனான என் ப்ரபாவத்துக்கும் என் பக்கலிலே ஸர்வபரந்யாஸம் பண்ணிக் க்ருதக்ருத்யனாயிருக்கிற உன் நிலைக்கும் தகுதியன்றென்று திருவுள்ளம்.

விளக்கம் – இவ்விதம் உனது அனைத்துவிதமான சோகங்களும் நீங்கும்படியாக எனது அனுக்ரஹத்தை நீ பெற்றாய். ஆகவே இனி நீ சோகம் அடைதல் என்பது, ப்ரபத்திக்கு முன்பாக நீ செய்யும் தவறுகளால் எனது தண்டனைக்கு உள்ளாவாய் என அறிந்திருந்தும் சோகம் அடையாமல் அப்போது இருந்தது போன்று மூடத்தனமே ஆகும். ப்ரபத்தியின் பின்னர் சோகம் கொள்ளுதல் என்பது, "ப்ரபத்தி உபாயத்தின் மேன்மை, உன்னுடைய பொறுப்புகள் அனைத்தையும் என் மீது ஏற்றுக் கொள்கின்ற ஸித்தோபாயனாகிய எனது ப்ரபாவம், என்னிடம் உனது பாரங்கள் அனைத்தையும் ஒப்படைத்த பின்னர் செய்யவேண்டியதைச் செய்தவனாக நிற்கும் உன்னுடைய நிலை" ஆகிய அனைத்திற்கும் ஏற்புடையதன்று.

சமரச்லோகத்தில் உள்ள "மா சுச:" என்பதே உயர்ந்த ரஹஸ்யம்

மூலம் – இப்படிச் சரமச்லோகத்தில் ஸாரதமான "மா சுச:" என்கிற சரமவாக்யத்தின் தாத்பர்யத்தைத் தங்கள் சரமதசையிலே ஆசார்யர்கள் ஸச்சிஷ்யர்களுக்கு உபதேசிப்பார்கள்.

விளக்கம் – இவ்விதமாக சரமச்லோகத்தில் உள்ள “மா சுச:” என்னும் பகுதியானது, இந்த ச்லோகத்தின் ஸாரமாகவே உள்ளதால், இதன் கருத்தை ஆசார்யர்கள் தங்களுடைய இறுதி நாட்களில் சிறந்த சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வர்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

ஆசார்ய ஹ்ருதயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 118)

வ்யாக்யானம் - [5] (வலஞ்செய் தெண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுது மென்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் ச்ரோதவ்யம் த்ரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யமெல்லாம் வெளியிட்டு) “கொண்ட கோயிலை வலஞ்செய்திங்காடுதும் கூத்தே” என்று அவனெழுந்தருளி நிற்கிற தேசத்தைக் குறித்து அநுகூலவ்ருத்தியைப் பண்ணி ஹ்ருஷ்டராவோம் வாருங்கோளென்கையாலே கர்த்தவ்யமும், “எண்ணுமினெந்தை நாமம்” என்று ஸ்வாமியுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோளென்கையாலே ஸ்மர்த்தவ்யமும், “பேசுமின் கூசமின்றி” என்று உங்களயோக்யதை பார்த்துக் கூசாதே திருவனந்தபுரத்திலே ஸ்நேஹத்தைப்பண்ணி வர்த்திக்கிறவனைப் பேசுங்கோளென்கையாலே வக்தவ்யமும், “நமர்களோ சொல்லக் கேண்மின்” என்று நம்மோடு ஸம்பந்தமுடையீர்! நாம் சொல்லுகிறத்தைக் கேளுங்கோளென்கையாலே ச்ரோதவ்யமும், “படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதங்காண நடமினோ” என்று திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோளென்கையாலே த்ரஷ்டவ்ய கந்தவ்யங்களும், “அனந்தபுரநகர் புகுதுமின்றே” என்று இச்சை பிறந்தவின்றே திருவனந்தபுரத்திலே போய்ப்புக வாருங்கோளென்கையாலே வஸ்தவ்யமுமாகிறவை யெல்லாமவர்களுக்கு வெளியிட்டு.

விளக்கம் – (வலம் செய்து என்று கர்த்தவ்யம்) – திருவாய்மொழி (10-1-5) – கொண்ட கோயிலை வலஞ்செய்திங்காடுதும் கூத்தே – என்று, “அவன் எழுந்தருளியுள்ள திவ்யதேசத்தைக் குறித்து எப்போதும் அவனுக்கு ஏற்ற செயல்களைச் செய்து நாம் மகிழ்ச்சி கொண்டவர்களாக இருப்போம் வருவீர்களாக”

என்பதன் மூலம், செய்யத்தக்க செயலையும். (எண்ணுமின் என்று ஸ்மர்த்தவ்யம்) - திருவாய்மொழி (10-2-5) எண்ணுமின் எந்தை நாமம் – என்று "எனது ஸ்வாமியுடைய திருநாமத்தை எப்போதும் எண்ணியபடி இருப்பீர்களாக" என்பதன் மூலம், எண்ணத்தக்க விஷயத்தையும். (பேசுமின் என்று வக்தவ்யம்) - திருவாய்மொழி (10-2-4) – பேசுமின் கூசமின்றி – என்று "உங்களுடைய தாழ்வுகளை எண்ணி வெட்கம் கொண்டு விலகாமல் திருவனந்தபுரத்தில் எழுதருளியுள்ளவனைக் குறித்துப் பேசுவீர்களாக" என்று கூறுவதன் மூலம், பேசத்தக்க விஷயத்தையும். (கேள்மின் என்று ச்ரோதவ்யம்) - திருவாய்மொழி (10-2-8) - நமர்களோ சொல்லக் கேண்மின் – என்று "நம்முடன் ஸம்பந்தம் கொண்டவர்களே! நாம் உரைப்பதை நீங்கள் கேட்பீர்களாக" என்று கூறுவதன் மூலம், கேட்கத்தக்க விஷயத்தையும். (காண்மின் நடமின் என்று த்ரஷ்டவ்யம் கந்தவ்யம்) – திருவாய்மொழி (10-2-1) - படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதங்காண நடமினோ – என்று "திருவனந்தபுரத்தில் கண்வளர்கின்ற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக் காண்பதற்குச் செல்வீர்களாக" என்பதன் மூலம் காணத்தக்கதும் சென்று அடையத்தக்கதும் ஆகிய விஷயத்தையும். (புகுதும் என்று வஸ்தவ்யம்) - திருவாய்மொழி (10-2-1) – அனந்தபுரநகர் புகுதும் இன்றே - என்று "ஆசை ஏற்பட்ட இன்றே திருவனந்தபுரத்திற்குச் சென்று புகுவதற்கு வருவீர்களாக" என்பதன் மூலம் வசிப்பதற்கு ஏற்ற விஷயமாகவும் உள்ளதை. (எல்லாம் வெளியிட்டு) – எல்லாம் அவர்களுக்கு வெளிப்படுத்தி.

வ்யாக்யானம் - [6] (பிணக்கறவை சார்வாக நிகமித்து) உபக்ரமித்தவர்த்தத்தை உபஸம்ஹரிக்கை சாஸ்த்ரக்ரமமாகையாலே, "பிணக்கற" என்கிற பாட்டிலே "வணக்குடைத் தவ நெறி" என்று உபக்ரமித்த பக்தியோகத்தை, "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்ற ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி நிகமித்து. இதின் பட்டோலையான க்ரந்தத்திலே "வீடுமுன் முற்றவும் பத்துடையடியவரிலே உபதேசிக்கத் தொடங்கின ஸாத்யஸித்த ரூபமான ஸாதநத்வயத்தையும் தவநெறிக்குப் பரமன் பணித்த என்று நிகமித்து" என்றவர் இதிலே இப்படி அருளிச்செய்வானென்னென்னில், அது "வீடுமுன் முற்றம்" ப்ரபத்தி பரமாகவும் "பத்துடையடியவர்" பக்தி பரமாகவும் பூர்வர்கள் நிர்வஹித்த கட்டளையைப் பிடித்தருளிச் செய்தார். இது "வீடுமின் முற்ற"த்தையும் பக்திபரமாக்கி யோஜித்தருளின எம்பெருமானார் நிர்வாஹக் கட்டளையைப்

பிடித்தருளிச் செய்தார். இதிறே ஸகல வ்யாக்யாந ஸித்தமுமாய் ஈட்டிலும் ப்ரதாந யோஜனையுமாயிருக்குமது; இந்த க்ரமத்திலேயிறே இவர்தாம் முதல்பத்தில் பக்தியை யுபதேசிக்கிறாரென்றருளிச் செய்ததும்; ஆகையால் அது முன்புள்ளாரருளிச் செய்தபடியைப்பற்ற வருளிச்செய்தார்; இது எம்பெருமானார் யோஜனையாய் பின்புள்ளாரெல்லாரும் அருளிச்செய்து கொண்டு போந்த மர்யாதையைப்பற்ற வருளிச்செய்தாரென்று கொள்ளுமித்தனை. “வணக்குடைத் தவநெறி” என்கிறவிது ப்ரபத்தி பரமாகவும் ஒரு யோஜனை ஈட்டிலே தோன்றியிருக்கையாலே “பிணக்கறவை” என்கிறவிதிலே பக்தி ப்ரபத்திகளிரண்டையும் கூட்டிக்கொண்டு, சார்வே தவநெறியிலே, “சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்” என்றும், “பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டேன் கமலமலர்ப்பாதம்” என்றும் இரண்டையும் நிகமிக்கிறாரென்றாலோ வென்னில், அதுக்குமநுபபத்தியுண்டு, “பிணக்கற” என்கிற பாட்டிலே ப்ரபத்திபரமான யோஜனையுண்டானாலும் விகல்பமொழிய ஸமுச்சயம் கூடாமையாலே. ஆகையாலே ஸகல வ்யாக்யானங்களுக்குஞ் சேர, “பிணக்கற”வில் உபக்ரமித்த பக்தியை நிகமிக்கிறாரென்ன வமையும். ஆனால், பக்த்யுபதேசோபக்ரமம் “வீடுமின் முற்ற”த்திலேயாயிருக்க, “பிணக்கறவை” யென்பானென்னென்னில், “வீடுமின் என்று த்யாஜ்யோபாதேய தோஷகுண பரித்யாக ஸமர்ப்பண க்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக உபதேசித்து” என்று அத்தையுமிதுக்கு சேஷமாக வொருங்கவிட்டுக் கொண்டு வந்து, “அவனுரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமற வுணர்வு கொண்டு நலஞ்செய்வது” என்று தாம் யோஜித்த க்ரமத்தைப் பிடித்து முதல்பத்தில் தொடங்கின பக்தியோகத்தையென்றபடி. “பிணக்கற”த் தொடங்கி “வேதப்புனித விறுதிசொன்ன” என்றிறே கீழுமருளிச்செய்தது. ஆகவிப்படி முதல்பத்திலுபக்ரமித்த பக்தியை நிகமித்துக்கொண்டு.

விளக்கம் - (பிணக்கறவை சார்வாக நிகமித்து) - முதலில் தொடங்கப்பட்ட கருத்தை இறுதியாக முடித்தல் என்பதே சாஸ்த்ர விதிமுறை என்று காரணத்தால், திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற – என்ற பாசுரத்தில் “வணக்குடைத் தவநெறி” என்று தொடங்கி கூறப்பட்ட பக்தியோகத்தை, திருவாய்மொழி (10-4-1) - சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள் – என்று தன்னுடைய பேற்றுடன் சரியாகப் பொருந்தியவிதத்தை உரைத்து முடித்து. ஆனால் இந்த நூலின் பட்டோலையாக

உள்ள நூலில், "திருவாய்மொழி (1-2-1) - வீடுமின் முற்றவும் – என்பதிலும், திருவாய்மொழி (1-3-1) – பத்துடை அடியவர் – என்பதிலும் உபதேசிக்கத் தொடங்கியதான ஸாத்யோபாயம் மற்றும் ஸித்தோபாயம் ஆகிய இரண்டு ஸாதனங்களையும் [அதாவது பக்தி மற்றும் ப்ரபத்தி என்ற இரண்டையும்], திருவாய்மொழி (10-4-9) – பரமன் பணித்த - என்று முடித்து" என்பதாக அருளிச்செய்தார்; இங்கு வேறுவிதமாக ஏன் அருளிச்செய்தார்? இதற்கு விடை அளிப்போம். திருவாய்மொழி (1-2-1) - வீடுமின் முற்றவும் – என்பதை ப்ரபத்தி வடிவமாகவும், திருவாய்மொழி (1-3) – பத்துடை அடியவர் - என்பதை பக்தி வடிவமாகவும் நம்முடைய பூர்வாசார்யர்கள் கொண்ட காரணத்தால், அந்த நூலில் இவ்விதமாக அருளிச்செய்தார். ஆனால் இங்கு, திருவாய்மொழி (1-2) - வீடுமின் முற்றவும் – என்பதை பக்தி வடிவமாக எம்பெருமானார் அருளிச்செய்தபடியே அருளிச்செய்தார். இவ்விதமாகவே அனைத்து வ்யாக்யானங்களில் கூறப்படுவதாகவும், ஈட்டின் தொடக்கத்தில் அருளிச்செய்யப்படுவதாகவும் உள்ளது. இதே முறையில் இவர் "முதல் பத்தில் பக்தியை அருளிச்செய்கிறார்" என்று கூறினார். ஆகவே அந்தப் பட்டோலையில், முன்பு உள்ள ஆசார்யர்கள் அருளிச்செய்தவிதமாக உரைத்தார்; இங்கு எம்பெருமானார் அருளிச்செய்ததாகப் பின்பு உள்ளவர்கள் அனைவரும் அருளிச்செய்து வந்த விதமாக உரைத்தார். ஆனால், "திருவாய்மொழி (1-3-5) - வணக்குடைத் தவநெறி - என்பது ப்ரபத்தி வடிவமாகவே உள்ளது", என்று ஈட்டு வ்யாக்யானத்தில் கூறப்பட்டுள்ளது; எனவே திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற - என்பதில் பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டையும் சேர்த்துக்கொண்டு, திருவாய்மொழி (10-4-1) – சார்வே தவநெறி - என்பதில் உள்ளதான "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்பதன் மூலம் பக்தி நெறியையும், "திருவாய்மொழி (10-4-9) – பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டேன் கமலமலர்ப்பாதம்" என்பதன் மூலம் ப்ரபத்தி நெறியையும் அருளிசெய்கிறார் என்று கொள்ளலாம் அல்லவோ? இதற்கு விடை அளிப்போம். இவ்விதம் கொள்வதில் பொருந்தாமை ஏற்படும். எப்படி? திருவாய்மொழி (1-2-5) – பிணக்கற - என்ற பாசுரத்தில் ப்ரபத்தியானது உள்ளது என்றாலும், இத்தகைய கருத்தானது தனியாகவே கூறப்பட்டது அல்லாமல் சேர்த்துக் கூறப்படவில்லை. எனவே அனைத்து வ்யாக்யானங்களுக்கும் பொருந்தும்விதமாக திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற - என்பதில் தொடங்கப்பட்ட பக்தியையே, திருவாய்மொழி (10-

4-1) – சார்வே – என்பதில் முடிக்கிறார் என்று கொள்ளலாம். ஆனால் பக்தி குறித்த உபதேசமானது திருவாய்மொழி (1-2-1) – வீடுமின் முற்றவும் - என்பதில் தொடங்கப்படுவதாக உள்ளபோது, திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற - என்பதில் தொடங்கப்படுவதாக ஏன் கூறவேண்டும்? ஆசார்யஹ்ருதயம் (219) - வீடுமின் என்று த்யாஜ்யோபாதேய தோஷகுண பரித்யாக ஸமர்ப்பண க்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக உபதேசித்து – என்பதில் கூறப்பட்டபடி அந்தத் திருவாய்மொழியையும் இதற்கு உறுப்பாக ஒன்றாகச் சேர்த்து உரைத்துக் கொண்டு வந்து, ஆசார்யஹ்ருதயம் (219) – அவனுரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமற வுணர்வு கொண்டு நலஞ்செய்வது – என்று தான் முன்பு அருளிச்செய்த அதே முறையைப் பின்பற்றி, “முதல் பத்தில் தொடக்கப் பெற்ற பக்தியோகத்தை” என்று அருளிச்செய்தார். ஆசார்யஹ்ருதயம் (224) என்பதில் “பிணக்கற” என்று தொடங்கி “வேதப்புனித விறுதிசொன்ன” என்று அல்லவோ அருளிச்செய்தார்? எனவே இப்படியாக முதல் பத்தில் தொடங்கப்பட்ட பக்தியை முடித்துக் கொண்டு.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

…தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 263)

4-3-2 பூசும்சாந்து என் நெஞ்சமே புணையும் கண்ணி எனதுடைய
வாசகம் செய்மாலையே வான்பட்டாடையும் அஃதே
தேசமான அணிகலனும் என் கைகூப்புச் செய்கையே
ஈசன் ஞாலமுண்டுமிழ்ந்த எந்தை ஏக மூர்த்திக்கே

பொருள் – இயல்பாகவே அனைத்தையும் நியமிப்பவனும், ப்ரளயத்தின்போது அனைத்தையும் தனது திருவயிற்றில் வைத்து பின்னர் வெளிப்படுத்தியதால் அனைவருக்கும் ரக்ஷகனும், இவ்விதமாகப் பலவற்றாலும் என்னைத் தனக்கே அடிமை என்று எழுதிக் கொண்ட எனது ஸ்வாமியும், இதனைப் போன்று இரண்டாவது ஏதும் இல்லை என்னலாம்படி உள்ள திருமேனி கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரனுக்கு, கூனி பூசிய சாந்து போன்ற தகுதியான சாந்தாகவே எனது நெஞ்சம் உள்ளது. ஶ்ரீமாலாகரர் அளித்த மாலை போன்று மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கின்ற மாலை போன்று எனது சொற்கள் கொண்டு அமைக்கப்பட்ட மாலை உள்ளது. ஆதிசேஷன் சமர்ப்பணம் செய்தது என்று கூறும்விதமாக மிகவும் நேர்த்தியான பொன்னால் ஆகிய பட்டாடையும் எனது சொற்களாலே அமையப்பெற்றதாகும். மிகுந்த ஒளியுடன் கூடிய ஆபரணங்கள் அனைத்தும் எனது கைகளைக் குவித்து நான் செய்யும் நமஸ்காரங்களே ஆகும்.

அவதாரிகை – "என்னுடைய கரணகார்யமான ஸ்ம்ருத்யாதிகளே பரிபூர்ணனானவனுக்கு போகோபகரணங்களெல்லாமாயிற்று" என்கிறார்.

விளக்கம் – "எனது உடல் உறுப்புகளின் செயல்களாக உள்ள நினைவுகள் போன்ற அனைத்தும், அனைத்துவிதத்திலும் முழுமை பெற்ற ஸர்வேச்வரனுக்கு இன்பம் அளிப்பவையாக உள்ளன", என்று கூறுகிறார் .

வ்யாக்யானம் - (பூசும்சாந்து என் நெஞ்சமே) இத்திருமேனியினுடைய வைலக்ஷண்யத்தையும், அவனுக்குத் தம்பக்கலுண்டான விருப்பத்தையும் அநுஸந்தித்துப் பின்னாடித் திரியவுஞ் சொல்லுகிறார். (புனையுங்கண்ணி) வழக்கனான மாலையன்றிக்கே சாத்தப்படும் மாலை. (எனதுடைய வாசகஞ் செய்மாலையே) இவர் "அவனுக்கு" என்று சொல்லவேண்டா; இவருடைமையாகில் அவனுக்கேயாயிருக்கும். (வாசகஞ் செய் மாலையே) இவர் நெஞ்சிற்காட்டிலும் வாக்கு பரிமளம் விஞ்சியிருக்கும்போலே காணும். பூக்கட்டியிறே சாந்து மணங்கொடுப்பது. (வான் பட்டாடையும் அஃதே) அந்த உக்திதானே அவனுக்குப் பும்ஸ்த்வாவஹமான பரிவட்டமும். இவருடைய "பா", நல்ல நூலாகையாலே வான்பட்டாடை யாயிற்றுக்காணும். "நல்ல நூலாக வேணும்" என்று அடியிலே நோற்று நூற்றவரிறே.

விளக்கம் - (பூசும்சாந்து என் நெஞ்சமே) - ஸர்வேச்வரனுடைய திருமேனிக்கே உரித்தான வேறுபட்ட மேன்மை மற்றும் அவனுக்குத் தன் மீது ஏற்பட்ட அளவு கடந்த விருப்பம் ஆகியவற்றை எண்ணியபடி, கடந்த பாசுரத்தில் உரைத்த தனது நெஞ்சம் குறித்த கருத்தையே இங்கு மீண்டும் உரைக்கிறார். (புனையுங்கண்ணி) - அவனுக்குச் சாற்றப்படும் மாலை. (எனதுடைய வாசகஞ் செய்மாலையே) – இங்கு "எனது" என்று மமகாரம் வெளிப்படுத்தலாமோ? "அவனுக்கு" என்று உரைக்கவேண்டாமோ? இதற்கு விடை அளிக்கிறார்; இவருடைய உடைமைகள் அனைத்தும் அவனுக்கே என்றே இருக்கும். (வாசகஞ் செய் மாலையே) - இவருடைய நெஞ்சத்தைக் காட்டிலும் வாக்கில் அதிகமாகப் பரிமளம் உள்ளது; ஆகவேதான் தனது வாக்கை "மாலை" என்கிறார். சாந்து அதிகமான நறுமணம் அளிப்பது ஏன் என்றால், அருகில் உள்ள மலர்கள் காரணமாகவே ஆகும். ஆகவே

அவ்வாக்கானது மனதிற்குப் பரிமளம் கொடுக்கிறது. (வான் பட்டாடையும் அஃதே) - இவருடைய சொற்களானவை, அவனுக்கே உரித்தான ஆண்மைத்தன்மைக்கு அடையாளமாக உள்ள திருப்பரிவட்டம். இவருடைய பாசுரங்கள் அனைத்தும் "நல்ல சாஸ்திரம் அல்லது நல்ல நூல்" என்பதால், சிறந்த பட்டாடையாக உள்ளது. "நல்ல நூலாக வேண்டும்" என்று இவர் நோற்று நூற்றார் அல்லவோ?

வ்யாக்யானம் - (தேசமான அணிகலனும்) தனக்குத் தேஜஸ்கரமான ஆபரணமும். (என் கை கூப்புச் செய்கையே) சேரபாண்டியன் தம்பிரானேபாதி, அவனுக்குத் தேஜஸ்கரமாகா நின்றது இவருடைய அஞ்சலி. இவற்றாலே நிறம் பெற்றானாயிருக்கிறவன்தான் ஒரு குறைவாளனா யிருக்குப்பெற்றதோ! (ஈசன்) ஸர்வேச்வரன். "ரக்ஷகன்" என்னும் பேரேயாய் உடைமை நோவுபட விட்டிருக்குமோ என்னில், (ஞாலமுண்டுமிழ்ந்த) ஜகத்துக்கு ஸர்வப்ரகார ரக்ஷகன். (எந்தை) அந்த ரக்ஷணத்தாலே என்னை எழுதிக் கொண்டவன். (ஏக மூர்த்திக்கு) அத்விதீயமான திருமேனியையுடையவனுக்கு. (ஏக மூர்த்திக்கு பூசும் சாந்து என் நெஞ்சமே) "ஸர்வகந்த:" என்கிற திருமேனிக்கு இது சேருமே?

விளக்கம் - (தேசமான அணிகலனும்) - மிகுந்த தேஜஸ் கொண்ட ஆபரணம். (என் கை கூப்புச் செய்கையே) - திருவரங்கம் நம்பெருமாளுடைய பதக்கமாக உள்ளதான "சேரபாண்டியன் தம்பிரான்" என்பது போன்று அவனுக்கு ஏற்றதொரு ஒளியை இவருடைய நமஸ்காரங்கள் உண்டாக்கின. ஆனால் இவருடைய நமஸ்காரத்தால் ஒளி பெற்றான் என்றால், அதுவரை அவன் குறையுடன் கூடியவனாக இருந்தானோ என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். (ஈசன்) - ஸர்வேச்வரன். "ரக்ஷகன்" என்று பயர் கொண்ட ஒருவன், தனது உடைமைகள் துன்பத்தில் உள்ளதைக் காண்பானோ என்றால், (ஞாலம் உண்டு உமிழ்ந்த) - இந்து லோகத்திற்கு அனைத்துவிதத்திலும் ரக்ஷகன். (எந்தை) - அத்தகைய ரக்ஷகத்தன்மை மூலம் என்னைத் தனக்கே உரியவன் என்று எழுதி வாங்கிக் கொண்டவன். (ஏக மூர்த்திக்கு) - இதனைப் போன்று வேறு ஒன்று உள்ளது என்று கூற முடியாதபடி உள்ள திருமேனி கொண்டவன். "ஸர்வகந்த: - அனைத்து நறுமணம்" என்பதாக உள்ள திருமேனிக்கு எனது நெஞ்சம் சாந்தாக உள்ளது.

4-4-3 ஏகமூர்த்தி யிருமுர்த்தி மூன்று மூர்த்தி பலமூர்த்தி
யாகி ஐந்துபூதமாய் இரண்டு சுடராய் அருவாகி
நாகமேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே உன்
ஆகமுற்றுமகத்தடக்கி ஆவியல்லல் மாய்த்ததே

பொருள் – அனைத்திற்கும் காரணப்பொருள் என்பதான ஒரு வடிவத்தைக் கொண்டவனாகவும், மஹத் மற்றும் அஹங்காரம் என்ற இரண்டு வடிவங்களைக் கொண்டவனாகவும், ஸத்வ ரஜோ தமஸ் என்பதான மூன்று குணங்களை வடிவமாகக் கொண்டவனாகவும், பதினோரு இந்த்ரியங்களைத் தனது ப்ரகாரங்களாகக் கொண்டவனாகவும், பஞ்சபூதங்களைத் தனது ரூபங்களாக உள்ளவனாகவும், இவை அனைத்திற்கும் உள்ளே அந்தர்யாமியாக புகுந்து, அனைத்தையும் காப்பாற்றும்விதமாக ஆதிசேஷன் மீது திருப்பாற்கடலில் யோகநித்திரை செய்தபடி உள்ள நாராயணனே! இவ்விதமாக உள்ள பலவற்றாலும் உனது வடிவையும் அழகையும் எனது நெஞ்சத்திற்குள் வரவழைத்து அனுபவித்து நிற்கும் எனது ஆத்மாவானது, கடந்த திருவாய்மொழியில் ஏற்பட்ட துக்கத்தை நீங்கப்பெற்றதே!

அவதாரிகை – "இத்தலையை உனக்காக்கி அத்தாலே க்ருதக்ருத்யனாயிருக்கிறாயே" என்கிறார்.

விளக்கம் – " என்னை உனக்கே என்று ஆக்கிக்கொண்டு, அதன் விளைவாக நீ உன்னைச் செய்யவேண்டிய அனைத்தையும் செய்தவன் என்று மாற்றிக் கொண்டாயே", என்று உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (ஏக மூர்த்தி) "ஸதேவ ஸோம்யேதமக்ர அஸீத்" என்கிறபடியே ஸ்ருஷ்டே: பூர்வகாலத்திலே இதம் சப்த வாச்யமாய்க் கிடந்த ப்ரபஞ்சமடைய அழிந்து ஸதவஸ்தமாய் சக்த்யவஸ்த ப்ரபை போலே இவையடையத் தன்பக்கலிலே கிடக்கத் தானொருவனுமேயாய் நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. (ஸ்ருஷ்டிக்கு முன்புத்தை ஸ்வாஸாதாரண விக்ரஹத்தைச் சொல்லுகிறதாகவுமாம்)

ஆக, ஸ்ருஷ்டியுந்முகனா யிருக்குமிருப்பைச் சொல்லுகிறது. (இருமூர்த்தி) ப்ரக்ருதி மஹான்களிரண்டையும் கடாக்ஷித்துக் கொண்டு அவற்றைத் திருமேனியாக கொண்டிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது. கார்யகாரணங்களிரண்டையும் தனக்குத் திருமேனியாகவுடையனா யிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது. இரண்டுக்குமுண்டான அண்மையைப் பற்றிச் சொல்லுகிறது. அவ்யக்தத்தினுடைய வ்யக்த தசையிறே மஹானாகிறது. (மூன்று மூர்த்தி) - த்ரிவிதாஹங்கார சரீரனாயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது. ஸாத்த்விகமாயும் ராஜஸமாயும், தாமஸமாயும் மூன்றுவகைப்பட்டிறே அஹங்காரந்தான் இருப்பது. (பல மூர்த்தியாகி ஐந்துபூதமாய்) கீழ்ச்சொன்ன அடைவன்று இங்குச் சொல்லுகிறது. ஸாத்த்விகாஹங்காரகார்யம் – ஏகாதசேந்த்ரியங்கள்; தாமஸாஹங்கார கார்யம் – ப்ருதிவ்யாதி பூதங்கள்; இரண்டுக்கும் உபகாரமாய் நிற்கும் ராஜஸாஹங்கார காரியம்; ஆக ஏகாதசேந்த்ரியங்களையும், ஸகுணமான பூதபஞ்சகங்களையும் சொல்லி, அவற்றைத் திருமேனியாகவுடையனாயிருக்கும்படி சொல்லுகிறது.

விளக்கம் - (ஏக மூர்த்தி) – சாந்தோக்ய உபநிஷத்தில் ஸத் ஏவ ஸோம்ய இதம் அகர ஆஸீத் - தொடக்கத்தில் இந்த ஸத் என்பது மட்டுமே இருந்தது - என்பதற்கு ஏற்ப ஸ்ருஷ்டிக்கு முன்பாக, “இதம் – இது” என்று சொல்லால் உரைக்கும்படியாகக் கிடந்த இந்த ப்ரபஞ்சம் முழுவதும் அழிந்து, “ஸத்” என்ற நிலையாக நீர் பூத்த நெருப்பு போன்று, இவை அனைத்தும் தன் அருகில் கிடக்கும்படியாக இருந்து, “ஒருவனே” என்று இருந்த நிலையைக் கூறுகிறார். அதாவது ஸ்ருஷ்டிக்கு முன்பு அவனுக்கே மட்டுமே உரியது என்றுள்ள திருமேனியைக் கூறுகிறார் எனலாம். (இரு மூர்த்தி) - ப்ரக்ருதி மற்றும் மஹாந் ஆகிய இரண்டையும் கடாக்ஷித்தபடி, அவற்றைத் தனது திருமேனியாகக் கொண்டுள்ள நிலையைக் கூறுகிறார். அல்லது கார்யம் மற்றும் காரணம் ஆகிய இரண்டையும் தனது திருமேனியாகக் கொண்ட நிலையைக் கூறுகிறார். கார்யம் மற்றும் காரணம் ஆகிய இரண்டும் நெருக்கமாக உள்ள நிலையைக் கூறுகிறார். அவ்யக்தம் என்பது புலப்படும் நிலையாக உள்ளபோது “மஹாந்” என்றாகிறது. (மூன்று மூர்த்தி) - மூன்றுவிதமான அஹங்காரங்களைத் தனது சரீரமாகக் கொண்ட நிலையைக் கூறுகிறார். அஹங்காரம் என்பது ஸத்விகம், தாமஸம், ராஜஸம் என மூன்றாக உள்ளது

அல்லவோ? (பல மூர்த்தியாகி ஐந்துபூதமாய்) - மேலே கூறியதை இங்கு மீண்டும் உரைக்கவில்லை. ஸாத்விக அஹங்காரத்தின் கார்யமாக ஐந்து கர்மேந்த்ரியங்கள், ஐந்து ஞானேந்த்ரியங்கள் மற்றும் மனம் என்று பதினோரு இந்த்ரியங்கள் உள்ளன; தாமஸ அஹங்காரத்தின் கார்யமாக ப்ருதிவி முதலான பஞ்சபூதங்கள் உள்ளன; ராஜஸ அஹங்காரத்தின் கார்யமாக இந்த இரண்டிற்கும் உதவி செய்தல் என்பது உள்ளது. எனவே இங்கு பதினோரு இந்த்ரியங்களையும், அவற்றின் குணமான பஞ்சபூதங்களையும் உரைத்து, இவற்றைத் தனது திருமேனியாகக் கொண்டவன் என்கிறார்.

வ்யாக்யானம் - (இரண்டு சுடராய்) ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதா பூர்வமகல்பயந்" என்கிறபடியே, சந்த்ராதித்யர்கள் – கார்ய வர்க்கத்துக்கு உபலக்ஷணம். (அருவாகி) இவற்றையுண்டாக்கி, "தத் ஸ்ருஷ்ட்வா, தததேவாநுப்ராவிசத், தததநுப்ரவிச்ய, ஸச்சத்யச்சாபவந்" என்கிறபடியே இவற்றினுடைய வஸ்துத்வ நாமபாக்த்வங்களுக்காகத் தான் அநுப்ரவேசித்து நிற்கும் நிலையை சொல்லுகிறது. அசித்தைச் சொல்லிற்றாகில் - கீழ், அருவென்று – ஆத்மாவைச் சொல்லிற்றானாலோ என்னில்; "அநேந ஜீவேநாத்மநாநு ப்ரவிச்ய" என்று ஜீவாந்தர்யாமிக்கு அநுப்ரவேசமாகையாலே அதுவும் சொல்லிற்றாயிற்று.

விளக்கம் - (இரண்டு சுடராய்) – தைத்திரீயத்தில் - ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதா பூர்வமகல்பயந் - சூரியனையும் சந்த்ரனையும் முந்தைய கல்பத்தில் இருந்தது போன்றே படைத்தான் - என்பதற்கு ஏற்ப சந்திரன் மற்றும் சூரியன் ஆகியவை அனைத்து கார்யங்களுக்கும் உதாரணம் ஆகும். (அருவாகி) – இவற்றைப் படைத்து. தைத்திரீயத்தில் - தத் ஸ்ருஷ்ட்வா, தததேவாநுப்ராவிசத், தததநுப்ரவிச்ய, ஸச்சத்யச்சாபவந் – அவை அனைத்தையும் படைத்து, அவை அனைத்திற்குள்ளும் புகுந்து, அவற்றை சேதந அசேதனங்களாகச் செய்தான் - என்பதற்கு ஏற்ப, இவை அனைத்தையும் பல பெயர் மற்றும் ரூபங்களாகப் படைப்பதற்காக இவன் புகுந்து நிற்கும் நிலையைக் கூறுகிறார். இதுவரை அசித் வஸ்துக்கள் அனைத்தையும் கூறினார், இங்கு "அரு" என்று ஆத்மாவைக் கூறியதாகக் கொள்ளலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். சாந்தோக்யத்தில் அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிச்ய - அனைத்து ஆத்மாக்களிலும் அவற்றின் ஆத்மாவாகப் புகுந்து –

என்று ஜீவாத்மாவின் அந்தர்யாமியாகப் புகுந்ததை உரைத்ததால், அதனையும் கூறினார் என்றாகிறது.

வ்யாக்யானம் - (நாகமேறி) – ஸ்ருஷ்டரான ப்ரஹ்மாதிகளுக்கு ஸமாச்ரயணீயனாகைக்காகத் திருப்பாற்கடலின் நடுவே திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தருளினவன். பயிரைச் செய்து செய்த்தலையிலே குடிகிடக்குமாபோலே, ஸ்ருஷ்டங்களான பதார்த்தங்களினுடைய ரக்ஷணார்த்தமாகக் கண்வளர்ந்தருளினானென்னவுமாம். (நாராயணனே) இப்படி ஸர்வகாலமும் ஒருபடிப்பட அநுக்ரஹ சீலனாகைக்கு அடியான ப்ராப்தி சொல்லுகிறது. (உன் ஆகமுற்றும் அகத்தடக்கி) ஆகம் - உடம்பு. உன் திருமேனிக்கு வேண்டும் சாந்து பூமாலை பரிவட்டம் ஆபரணங்கள் இவையெல்லாம். அகத்தடக்கி – என்னுள்ளேயுண்டாம்படி பண்ணி. இதிறே ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம். இப்படிச் செய்தத்தால் நிர்த்துக்கரானார் ஆர் என்னில், அவனாயிற்று.

விளக்கம் - (நாகம் ஏறி) - தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட நான்முகன் போன்ற அனைவராலும் அண்டப்படுபவனாக இருப்பதற்காக திருப்பாற்கடலில் ஆதிசேஷன் மீது சயனித்தபடி உள்ளவன். பயிரை வளர்த்து, அதனை நன்றாக பாதுகாப்பதற்காக அங்கேயே பரண் அமைத்து வாழ்வது போன்று, தன்னால் படைக்கப்பட்ட அனைத்தையும் காப்பதற்காகக் கண்வளர்கிறான். (நாரயணனே) - இவ்விதமாக அனைத்துகாலத்திலும் ஒரே போன்று அனுக்ரஹம் செய்பவனாக உள்ளதற்குக் காரணமாக உள்ள ஸம்பந்தத்தைக் கூறுகிறார். (உன் ஆகமுற்றும் அகத்தடக்கி) - ஆகம் என்றால் உடம்பு; உனது திருமேனிக்கு ஏற்றபடியான சாந்து, பூமாலை, திருப்பரிவட்டம், ஆபரணங்கள் போன்ற அனைத்தும். (அகத்து அடக்கி) - என்னுள்ளே உண்டாகும்படியாகச் செய்து. ஸ்ருஷ்டியின் ப்ரயோஜனம் என்பது இதுவே ஆகும் அல்லவோ? சரி, இவ்விதம் செய்ததன் விளைவாக எந்தவிதமான துக்கமும் இன்றி உள்ளது யார் என்றால், “அவனே” என்கிறார்.

வ்யாக்யானம் - (ஆவியல்லல் மாய்த்ததே) உன் திருவுள்ளத்திலுண்டான அல்லல் ஒருபடி நசிக்கப் பெற்றதே. இத்தலையை கரைமரஞ் சேர்த்து நீ க்ருதக்ருத்யனானாயே! அன்றிக்கே, என் ஆவியானது நிர்த்துக்கமாயிற்று

என்றுமாம். அதவா, ஏகமூர்த்தியென்று பரத்வத்தைச் சொல்லி, இருமூர்த்தியென்று வ்யூஹத்தைச் சொல்லி வாஸுதேவ ஸங்கர்ஷணர்களை நினைத்து, மூன்றுமூர்த்தியென்று ப்ரத்யுநரைச் சொல்லிற்றாய், பலமூர்த்தியென்று விபவங்களைச் சொல்லிற்றாய், ஐந்து பூதமாயிரண்டு சுடராயென்று இன்னார் ஸ்ருஷ்டிக்குக் கடவர், இன்னார் பாலநத்துக்குக் கடவர் என்கிறபடியாலே சொல்லுகிறதென்று நிர்வஹிப்பாருமுண்டு.

விளக்கம் - (ஆவியல்லல் மாய்த்ததே) - உனது திருவுள்ளத்தில் ஏற்பட்டிருந்த துன்பமானது இப்போது விலக்கப் பெற்று; இதன் கருத்து, "என்னை ஒருவிதமாகக் கரையேற்றி, நீ செய்யவேண்டியதைச் செய்தவன் என்று உன்னை ஆக்கிக்கொண்டாய்" என்பதாகும். அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம்; எனது ஆவியானது எந்தவிதமான துன்பமும் இல்லாத நிலையை அடைந்தது எனலாம். அல்லது "ஏக மூர்த்தி" என்பதன் மூலம் பரத்வத்தை உரைத்து, "இருமூர்த்தி" என்று வ்யூஹங்களை உரைப்பதால் வாஸுதேவன் மற்றும் ஸங்கர்ஷணன் போன்றவர்களை எண்ணி, "மூன்று மூர்த்தி" என்பதால் ப்ரத்யும்நன் மற்றும் அநிருத்தனைக் கூறினார் என்றும் உரைக்கலாம்; "பல மூர்த்தி" என்பதால் விபவங்கள் கூறப்பட்டு, "ஐந்து பூதமாய் இரண்டு சுடராய்" என்பதால் "இவர் ஸ்ருஷ்டிக்கு ஏற்றவர், இவர் காப்பாற்றுவதற்கு ஏற்றவர்" என்பது போன்றவை கூறப்படுவதாகவும் கொள்ளலாம்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

சது: ச்லோகீ

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை மற்றும் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த வ்யாக்யானங்கள் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 8)

ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த வ்யாக்யானம்

லக்ஷ்மீஸஹஸ்ரநாமத்தில் (17) - அகலங்கா அம்ருதாதார - எந்தவிதமான களங்கமும் அற்றவள், பரமாத்மாவைத் தனது ஆதாரமாகக் கொண்டவள் - என்று இதற்கு முன்பு கூறப்பட்டுள்ளதால் “அம்ருத” என்பது, “பரமாத்மாவைத் தனது ஆதாரமாகக் கொண்டவள்” என்ற பொருளைத் தருவதாகும். இந்தக் காரணத்தால்தான் அவனும் ஸ்ரீநிவாசன், ஸ்ரீதரன் என்று கொண்டாடப்படுகிறான். ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதையில் - யத: அஹம் ஆச்ரய: ச அஸ்யா மூர்த்தி: மம ததாத்மிகா - எந்த ஒரு காரணத்தால் நான் இவளுக்கு ஏற்ற இடமாக உள்ளேனோ, அதன் விளைவாக எனது இந்தத் திருமேனியானது அவளையே தனது ஸ்வரூபமாகாக் கொண்டதாக உள்ளது - என்று கூறப்பட்டது. “எந்த ஒரு சொல்லைச் சேர்ப்பதன் முலம் மற்ற அனைத்தைக் காட்டிலும் இந்த வஸ்து உயர்ந்தது என்று எண்ணம் ஏற்படுகிறதோ, அந்தச் சொல்லே எனது திருநாமம் ஆகும்”, என்று கருத்தே “ஸ்ரீ: இதி ஏவ” என்பதால் கூறப்பட்டது. எந்தவிதமான தோஷங்களும் அற்றவளாக, அனைத்துவிதமான மங்களங்கள் என்ற குணங்களுக்கு இருப்பிடமாக உள்ளவள் என்பதை உணர்த்தவே “பகவதி” என்று ச்லோகத்தில் கூறப்பட்டது.

(ப்ரூம: கதம் த்வாம் வயம்) - இவ்விதமாகப் பல மேன்மைகளைத் தன்னிடம் கொண்டவளாகிய “ஶ்ரீ” என்னும் இவளை, உள்ளது உள்ளபடி துதிக்க இயலாது என்கிறார். (த்வாம்) - கீழே உரைத்தபடி மஹாவிஷ்ணுவிற்குப் பத்னியாகவும், அவனைத் தவிர உள்ள மற்ற அனைத்திற்கும் எஜமானியாகவும், அவற்றுக்கு ஏற்றபடியான திருநாமங்களைக் கொண்டவளாகவும் ப்ரஸித்தி பெற்றவளாக, ஶ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-133) - ந தே வர்ணயிதும் சக்தா குணாந் ஜிஹ்வாபி வேதஸ: - நான்முகனுடைய நாக்குகள் கூட உன்னைத் துதித்து வர்ணிப்பதற்கான சக்தி அற்றவை - என்று நான்முகனால் கூடத் துதிக்கப்பட இயலாதவள் என்று கூறப்பட்டுள்ள உன்னை. (வயம்) - அளவுபடுத்தப்பட்ட ஞானம் மற்றும் சக்தி கொண்டவர்கள். ப்ரஹ்மாத்யா: ஸகலதேவா முநயச்ச தபோதனா: த்வாம் ஸ்தோதும் அபி நேகாநா: த்வத் ப்ரஸாத லவம்விநா - நான்முகன் உள்ளிட்ட அனைத்து தேவர்களும், தவம் என்பதையே தங்கள் செல்வமாகக் கொண்ட முனிவர்களும் உனது அனுக்ரஹம் இன்றி, உன்னைத் துதிப்பதற்கான சக்தி கொண்டவர்கள் அல்லர் - என்ற வசனத்தைப் பின்பற்றி, நான்முகன் முதலானவர்களும், ஆளவந்தாராகிய தானும் இந்த விஷயத்தில் ஸமமானவர்களே என்று உணர்த்துவதற்காகப் பன்மையில் கூறினார் என்று கருத்து. (கதம் ப்ரூம:) - உன்னை முழுமையாக வர்ணிப்பது இயலாது, அளவுபடுத்தி உரைப்பதும் சரியல்ல என்று பொருள்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

... தொடரும்